ராணி
காமிக்ஸ்
முகமூடிவீரர் மாயாவி
தோன்றும்
வழிப்பறிக்
கொள்ளைக்காரன்
ரூ.

உங்களுக்குத் தெரியுமா ?

இழே 9 மிருகங்களின் வால்பகுதி மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வா்லும் எந்த மிருகங்களுக்குரியது என்று உங்களுக்குத் தெரியுமா? முயன்று பாருங்கள். தெரியாதவர்கள் 65-ம் பக்கம் வாருங்கள்.



ராணி காமிக்ஸ் – 318
(மாதம் இருமுறை இதழ்)

செப்டம்பர் 16 – 30
1997

முகமூடிவீரர்
மாயாவி
தோன்றும்

வழிப்பறிக் கொள்ளைக்காரன்

மாயாவியும், டயானாவும் ஒரு விடுமுறையில் நியூயார்க் போனார்கள்.
சுதந்திராதேவி.... போன பிறவியில் தேவதையாக இருந்திருப்பாள்!
கப்பலிலிருந்து இறங்கி, ஒரு பூங்காவுக்குப் போனார்கள்.
இன்னும் எத்தனை நாள் இங்கே இருப் பீர்கள்?
சில நாள்தான். பிறகு காட்டுக்குப் போகவேண்டும்.
திடீர் என்று—
உதவி... உதவி...
கும்...
அய்யோ பாவம் கிழவி!
!

முகமூடி பாய்ந்தார்.
ஓடாதே நில்!
முகமூடி விரட்டிப் போனார்.
?!
யாரு... ஊருக்குப் புதுசோ...
உயிர்மேல் ஆசை இருந்தால் ஓடிப் போய்விடு!
கும்...
ஆ...!
கிழவியிடமா உன் வீரத்தைக் காட்டுகிறாய்!

இதற்குள் போலீசு வந்தது.
யாரோ வழிப்பறிக் கொள்ளைக்காரன்... இந்தப் பாட்டியின் கைப்பையைப் பறித்துக்கொண்டு ஓடிவிட்டான்!
அய்யோ... அம்மா...!
என்ன நடந்தது?
கொள்ளைக்காரனை துரத்திக்கொண்டு என் கணவர் போயிருக்கிறார்
...உன் கணவருக்கு அதிருஷ்டமிருந்தால், உயிரோடு வருவான்... இந்த வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் அவ்வளவு முரடர்கள்!
அதோ வருகிறார்!
மிகவும் நன்றி.
பாட்டி! போலீசு நிலையத்துக்கு வந்து, புகார் எழுதிக் கொடு!
ஆ... முடியாது!

அவன் ஆட்கள் என்னைக் கொன்று போட்டுவிடுவார்கள்!
எல்லாரும் இப்படித்தான் பயப்படுகிறார்கள்!
டயானா! என்னோடு காட்டுக்கு வந்துவிடு.
இந்தக் கொள்ளைக்காரர்கள் கொலைகாரர்களாக இருப்பார்கள் போலிருக்கிறதே!
அடுத்த நாள்... டயானா வீட்டில்—
காற்றோட்டமாகப் பூங்காவுக்குப் போய் வருகிறேன்.
டேவிட்! பூங்கா வரவர மோசமாகி விட்டது! கொள்ளைக்காரர்கள் பெருகிவிட்டார்கள்.
பயப்படாதே! என்னோடு டாமி வருகிறது.

டேவிட் பூங்காவில் உலாவினார்.
நல்ல வேட்டை.
ஒரேயடி! ஆளைத் தீர்த்துவிடுகிறேன்!!
யார்... கொள்ளைக் காரர்களா...
ஏ மிஸ்டர்... உன் பர்சை எடு!
!
கிழவன் துள்ளுகிறான்...
ஒரு போடு போடு!

ஆ...
சீக்கிரம்... பர்சை எடு...
ஆள் வர்றாங்க... ஓடு...
லொள்... லொள்... லொள்...

வெறும் இருபது ரூபாய்தான் இருக்கு...
ஏய்... அது என்ன?

போலீஸ் கமிஷனர் பதக்கம்... எனக்கு அழகா இருக்கா...
படா ஜோரு!

நகரச் செய்தி—
மாமா... டயானா வந்திருக்கிறேன்...
அவருக்கு இன்னும் மயக்கம் தெளியவில்லை.
முன்னாள் போலீஸ் கமிஷனரை தாக்கிய வழிப்பறிக் கொள்ளையர்...

போலீசு அதிகாரி வந்தார்.
யாராவது பிடிபட்டார்களா?
QUIET, PLEASE
சம்பவம் நடந்ததை நாலைந்து பேர் பார்த்திருக்கிறார்கள். ஆனால், எல்லாருமே வாயைத் திறக்க அஞ்சுகிறார்கள்.
அவர்களை நான் பார்க்கலாமா?

பூங்காவில் அடிபட்டுக் கிடந்த ஆளை நான்தான் பார்த்தேன்...

பக்கத்தில் நாய் குரைத்துக்கொண்டு நின்றது...
லொள்...
லொள்...
லொள்

நான் உடனே விசாரணை நடத்தினேன். யாருமே ஒத்துழைக்க வில்லை.
யாரை அடித்தார்? அடித்த ஆளைப் பார்த்தீர்களா?
இல்லையே...
எனக்குத் தெரியாது...

அடுத்த நாள்—
மாமா... உங்களுக்கு ஒன்றுமில்லை... டாக்டர் சொல்லிவிட்டார்...
என் போலீசு கமிஷனர் பதககத்தைக் கொண்டுபோய் விட்டார்களே!
கவலைப் படாதீர்கள் நான் மீட்டுத் தருகிறேன்!
கொள்ளைக்காரனைப் பிடித்தால் பதக்கத்தை மீட்டு விடலாம்!
ஆனால், நீங்கள் காட்டுக்குப் போகவேண்டுமே!
இல்லை... கொள்ளைக்காரர்களைப் பிடித்துப் பதக்கத்தை மீட்காமல் நான் காட்டுக்குப் போகப்போவது இல்லை!
மாயாவி பூங்காவுக்கு வந்தார்.
போலீசு என்றால் எல்லாரும் பயப்படு கிறார்கள்.
ஆனால், என்னோடு பேசக்கூடும்!
நேற்று இங்கே வழிப்பறி நடந்ததாமே...

அப்படியா... எனக்குத் தெரியாதே...
நான் பார்க்க வில்லையே!
எல்லோரும் இப்படிப் பயப்படுகிறார்களே...
நேற்று நான் பூங்காவுக்கு வரவேயில்லை...
POLICE COMMISSIONER
இவர்களைக் கேட்டுப் பயன் இல்லை... கொள்ளைக்காரர்களை நேருக்கு நேர் சந்திக்க வேண்டியதுதான்!
மாலை நேரம்— பூங்காவில் விளையாடிக்கொண்டிருந்தார்கள்.
இவர்களுக்குத் தெரிந்திருக்காது... இரவில் வந்தால்தான் ஏதாவது துப்புக் கிடைக்கும்...


மாயாவி இரவில் மீண்டும் பூங்காவுக்கு வந்தார்.
ஏ மிஸ்டர்... இரவில் இந்தப் பக்கம் வரக்கூடாது! கொள்ளைக்காரர்கள் நடமாடுவது உனக்குத் தெரியாதா?
எனக்கு இது துணையிருக்கிறது....
நல்ல துணைதான்... கொள்ளைக்காரர்கள் ஓடிப்போவார்கள்...
அடடே! அதை நான் நினைக்க வில்லையே! இனி டெவிலை வீட்டில் விட்டுவிட்டு வரவேண்டும்!
மறுநாள் இரவு... இரு கொள்ளைக்காரர்கள்—
வேறு பக்கம் போவோம்...
இந்தப் பக்கம் ஆளையே காணோமே...

அங்கே ஒரு தம்பதிகள்...
கூச்சல் போடாதே... கொன்றுவிடுவேன்... உன் பர்சை எடு...
ஏ குட்டி.... நீ அழகா இருக்கே....
மரியாதையா என்கூட வந்துவிடு...
!!
அப்போது... மாயாவி பாய்ந்தார்!
டேய்...

ஆ...
கும்...
டுமீல்...
ஆ...
இங்கே பார்...
லேசர் கத்தி...
மாயாவியின் குத்து இடியென இறங்கியது.
அய்யோ...!

இவன் முகமூடிக் கொள்ளைக்காரன் போல இருக் கிறானே ...
இல்லை... நில்லுங்கள் !

நில்லுங்கள்... உங்களை ஒன்றும் செய்ய மாட்டேன் !
ஓடி வா !

உங்கள் உதவி தேவை... இதோ வந்துவிடுகிறேன்...
என்ன தேடுகிறாய்?

இவர்கள் உங்களிடம் கொள்ளை அடித்தார்கள் அல்லவா? போலீசில் போய் புகார் செய்யுங்கள்!
அய்யோ... அதெல்லாம் வேண்டாம்! எங்களை விடுங்கள்...
ஒவ்வொருவரும் இப்படிப் பயப்படுவதால்தான் கொள்ளைக்காரர்கள் பயமில்லாமல் உலாவுகிறார்கள்!
தைரியமாகப் போலீசில் புகார் செய்ய வேண்டும்.
நீங்கள் சொல்லுவதும் சரிதான்.
இரண்டு பேரும் செத்துவிட்டார்களா?
இல்லை... வெறும் மயக்கம்!
பயங்கர அடிதான் அடித்திருக்கிறீர்கள். அவர்கள் கன்னத்தில் என்ன... மண்டை ஓடு முத்திரை?

கொள்ளைக்காரர்களின் இரகசிய முத்திரை போலிருக்கிறது!
உன்னைப் பார்த்தால் நல்லவனாத் தெரிகிறது. ஏன் முகமூடி அணிந்திருக்கிறாய்?
அதெல்லாம் பிறகு சொல்லுகிறேன். முதலில் போய் ஒரு போலீசை அழைத்து வருகிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள்!
போலீசு வரும்போது பயப்படாமல் நடந்ததைச் சொல்லுங்கள்!

சார்... அங்கே ஒரு தம்பதிகளுக்கு உங்கள் உதவி தேவைப்படுகிறது.
வழிப்பறிக் கொள்ளைக் காரர்களால் ஆபததா...
போலீசு அதிகாரி வந்தார்.
கொள்ளைக் காரர் களேதான்!
அட... வழிப்பறிக் கொள்ளைக் காரர்கள்!
மயங்கிக் கிடக்கிறார்களே... நீங்கள் அடித்தீர்களா?
இல்லை! அந்த முகமூடி ஆள்!
முகமூடி ஆளா?
உங்களை இங்கே அனுப்பினாரே... அவர்தான்!

அடுத்த நாள்... கொள்ளைக்காரர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார்கள்.
இவர்கள் உங்களைத் தாக்கிக் கொள்ளையடிக்க முயற்சித்தார்களா?
ஆமாம், நீதிபதி அவர்களே!
நல்ல அடி... இன்னும் எழுந்து நிற்க முடியவில்லையே!
கொள்ளைக்காரர்களைப் பிடித்த உங்களைப் பாராட்டுகிறேன்!
கொள்ளையர்களைப் பிடித்தது நாங்கள் அல்ல. ஒரு முகமூடி மனிதன்!
யார் அந்த முகமூடி மனிதன்?
யார் என்று தெரியவில்லை!
தினசரி கொள்ளையரிடமிருந்து தம்பதிகளைக் காத்த முகமூடி மனிதன்.
முகமூடி மனிதனாமே... யாராக இருக்கும்...
அதுதான் எனக்கும் புரியவில்லை, டயானா!

எனக்கு உங்களைப் பற்றித்தான் கவலை... இன்று இரவும் போகிறீர்களா?
ஆம், டயானா! பதக்கத்தை மீட்கும் வரை நான் போய்த்தான் ஆகவேண்டும்!


அடுத்த இரவு...
பார்பாரா! உனக்கு என்ன பைத்தியமா? இரவில் இந்தப் பூங்காவில் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கிறாய்?
இன்று பவுர்ணமிதானே! என்ன பயம்?
உனக்குப் பயமாக இருந்தால் என்னோடு வராதே, வில்சன்!
உன்னைத் தனியே விடமாட்டேன்!

திடீரென்று கொள்ளையர்கள் வந்தார்கள். குதிரைகள் மிரண்டன.
கும்...
ஆ...!

அவளைப் பிடி... வில்சன்...
ஆ...!
சாட்டையைக் கீழே போடு... சுட்டுத் தள்ளி விடுவேன்!
வழக்கம் போல மாயாவி வந்துகொண்டிருந்தார்!
?!
அவனைப் பிடி!
எப்படித் திடீர்னு வந்தான்?
யாரடா அது?

ஆ
கும்....
ஏய்...
கும்...
!
ஆ
ஒரு கொள்ளைக்காரன் லேசர் கத்தியை எடுக்க...
டுமீல்...!
!
சடார்!
மாயாவி மின்னல் வேகத்தில் செயல்பட்டார்!

டுமீல்...
ஆ...

மனிதன் அல்ல... பேய்...

கும்...
ஆ...

பயப்படாதே
பெண்ணே!
எல்லோரும் காலி!
நீயும் ஒரு
கொள்ளைக்
காரன்தானே?
!
நான் கொள்ளைக்காரன்
அல்ல. உங்களுக்கு உதவ
வந்தவன்.
சிறு காயந்தான்...
ஆனாலும்
டாக்டரிடம்
காட்டுங்கள்!
என்ன
தேடுகிறீர்கள்?
?
காணோமே...
விடப்போவது இல்லை...
கண்டுபிடித்தே திருவேன்.

உனக்கு எப்படி நன்றி சொல்லுவேன்? உன் பெயர்கூடத் தெரிய வில்லை!
அதுக்கு என்ன அவசரம்? அடுத்து நடக்கவேண்டியதைப் பார்ப்போம்!

அவர்கள் முகத்தில் என்ன முத்திரை... மண்டை ஓடு போல...
அவர்களின் முத்திரையோ என்னவோ...
அடுத்து என்ன செய்வது?

போலீசைக் கூட்டி வரவேண்டும்.
இவர்கள் எழுந்து ஓடிவிட்டால்?
எழவும் முடியாது! அவர்கள் ஓடவும் முடியாது!!
போலீசிடம் என்ன சொல்லுவது?
இந்த வழிப்பறிக் கொள்ளைக் காரர்களை அடித்து வீழ்த்தியதாகச் சொல்லுங்கள்.
நாங்களா? நீதானே அடித்து வீழ்த்தினாய்!
அந்த ஆள் வந்ததால் தப்பினோம்.
அவர் யார் என்று தெரியவில்லையே.

அவர் எங்கே? மாயமா மறைந்துவிட்டாரே!
செய்தி—
DAILY BUGLE
பூங்காவில் தம்பதிகளை காப்பாற்றிய முகமூடி மனிதன்.
MYSTERIOUS STRANGER SAVES HEIRESS FROM MUGGERS' ATTACK.
முகமூடி மனிதனாமே! யாராக இருக்கும்?
நானும் பத்திரிகையில்தான் பார்த்தேன்!
அவரைத் தொல்லை பண்ணாதீர்கள்! அவருக்கு ஓய்வு வேண்டும்!
என் பதக்கம் கிடைத்ததா?
அதுக்குத்தான் கொள்ளைக் காரர்களைத் தேடிக் கொண்டிருக்கிறேன்!
ஒவ்வோர் இரவும் மாயாவி பூங்காவுக்குப் போனார்!

கொள்ளையர்களை கடுமையாகத் தாக்கினார்.
அதே முகமூடி....
WHAM
கும்...
கும்... கும்...
வழிப்பறிக் கொள்ளையர் அட்டகாசம் ஓய்ந்தது!

டயானா, அவர் ஏன் தினம் இரவில் வெளியே போகிறார்?
நண்பர்களை பார்க்கத்தான்... வேறொன்றுமில்லை.
அந்த முகமூடி மனிதன் பற்றித்தான் ஊரெங்கும் பேச்சு...
இன்று இரவு நாம் சிலரை நேரடியாக சந்திக்கிறோம்...
வழிப்பறிக் கொள்ளைக்காரர்களிடமிருந்து இவர்களை முகமூடி மனிதன் காப்பாற்றினான்.

என்ன நடந்தது என்பதை சொல்லுங்களேன்.
இரண்டு கொள்ளைக்காரர்கள் எங்களை தாக்கினார்கள்.
திடீர் என்று எங்கிருந்தோ முகமூடி மனிதன் பாய்ந்து வந்தான்....
கொள்ளையர் துப்பாக்கி வைத்திருந்தார்கள். ஆனால், முகமூடி அஞ்சவில்லை...
உங்களை ஒன்றும் செய்ய மாட்டேன்....

முகமூடியைப் பார்த்து முதலில் நாங்கள் பயந்தோம். ஆனால், அவர் சுத்தவீரர்... ஆண்மை நிறைந்தவர்... அழகானவர்.
அழகானவரா... முகமூடி அணிந்திருந்தாரே?
ஆண்களுக்கு வீரந்தானே அழகு...
ஓ.கே.
உங்களையும் முகமூடி காப்பாற்றியிருக்கிறார்.
நான் பயந்தே போனேன்...
ஆமாம். கொள்ளையர்கள் சுட்டார்கள்... நான் குதிரை யிலிருந்து விழுந்தேன்...
திடீர் என்று முகமூடி மனிதர் அங்கே வந்தார்.

மின்னல் வேகத்தில் கொள்ளையர்களை அடித்து வீழ்த்தினார்... குண்டு பட்ட என் கைக்குக் கட்டுப் போட்டார்....
கொள்ளைக்காரர் பைகளில் எதையோ தேடினார்.
ஆமாம்... நாங்களும் கவனித்தோம்.
கொள்ளைக்காரர்களிடமே கொள்ளையடித்தாரா?
இல்லை... இல்லை... எதையோ தேடினார்...
என்னவென்று தெரியவில்லை...

மர்மத்துக்கு மேல் மர்மமாக இருக்கிறதே!
NEWS CLOSE-UP
கொள்ளைக்காரர்களும் டி.வி. பார்த்துக்கொண்டிருந்தார்கள்.
ஆமாம்! ஒரே மர்மமாகத்தான் இருக்கிறது!
அந்த மர்மத்தை நாம் உடைக்க வேண்டும்!
மாக்ஸ்! அந்த ஆள் உன்னைத்தான் தேடுகிறான் என்று நினைக்கிறேன்!
அவன் முகமூடியைக் கிழித்தெறிய வேண்டும்! இல்லாவிட்டால் நமக்கு ஆபத்து!!

வெளியே போகவே பயமா இருக்கிறது!
ஆமாம்.
பழைய போலீசு கமிஷனரைப் பார்க்கப் புதிய போலீசு அதிகாரிகள் வந்தார்கள்.
இப்போது எவ்வளவோ தேவலை...
கொள்ளைக்காரர்கள் உங்கள் கமிஷனர் பதக்கத்தைக் கொண்டுபோய்விட் டார்களாமே?
நான் ஓய்வுபெற்றபோது எனது பணியைப் பாராட்டி அரசு கொடுத்த பதக்கம், அது!
அப்போது மாயாவி வந்தார்.
அந்த கொள்ளைக் காரர்களைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா?

இவர் என் மருமகளின் கணவர்
அலோ...
கொள்ளைக்காரர் ளைப் பற்றி ஏதாவது அடையாளம் சொல்ல முடியுமா ?
அவர் சாப்பிடும் நேரம்...
எப்போது வேண்டுமானாலும் வாருங்கள். உங்களுடன் பேசுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.
இவர்களும் போலீசு அதிகாரிகளாம்! இத்தனை நாள் ஆகியும் கொள்ளைக்காரர்களைப் பிடிக்க முடியவில்லையே!
சாப்பிடுங்கள்... பிறகு வருகிறேன்.

நேற்று இரவும் பூங்காவில் கொள்ளையர் நடமாட்டம் இல்லை. முகமூடிக்கு நமது நன்றி. ஆமாம், யார் அந்த முகமூடி
யாரோ மர்மமனிதன்! அவனைப் பார்த்துக் கொள்ளையர்கள் தொடை நடுங்குகிறார்கள்!
முகமூடியைப் பார்த்து நாம் நடுங்குகிறோமாம்...
நாம் என்று சொல்லாதே! நீதான் நடுங்குகிறாய், மாக்ஸ்!
ஆமாம்!
மாக்ஸ் கொதித்து எழுந்தான்.
ஆ!
இந்த வீரத்தை முகமூடி மனிதனிடம் காட்டு!
!!

காட்டத்தான் போகிறேன்!
நண்பர்களே! ஓடிவாருங்கள்!!
முகமூடி மனிதனை நேருக்கு நேர் சந்திக்கப் போகிறேன்!
எப்படி?
அதுக்கு ஒரு நாடகம் ஆடப்போகிறேன்!
இடை அழகியைக் கூப்பிடு!
இவள்தான் இடை அழகி!
உன்னைப் பொறியாக வைத்துத்தான் முகமூடியைப் பிடிக்கப் போகிறேன்!
பிரான்சிஸ்! நீயும் இடை அழகியும் பூங்காவுக்குப் போகிறீர்கள்...
நானா...

பயப்படாமல் போ. நாங்களும துணைக்கு வருகிறோம்...
நீங்கள் காதல் ஜோடி போலப் பேசிக்கொண்டிருங்கள். நான் உங்களை தாக்குவேன். உங்களுக்கு உதவ முகமூடி வருவான்....
முகமூடி வந்ததும் நான் விசில் அடிப்பேன். எல்லோரும் ஓடிவந்து அவனைப் பந்தாட வேண்டும்!
இடை அழகியும் பிரான்சிசும் பூங்காவில் காதல் ஜோடி போல அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.
ஏன் இப்படிப் பயப்படுகிறாய்? தைரியமா இரு!
நான் ஏற்கனவே அடிவாங்கியவன்.
மாக்ஸ் பதுங்கி இருந்தான்.
மாக்ஸ்... முகமூடி வருவானா?
வருவான்...

அதேநேரம்... டயானா வீட்டில்
பூங்காவுக்கா புறப்பட்டு விட்டீர்கள்!
என் வேலை இன்னும் முடிய வில்லையே!

எனக்குப் பயமா இருக்கிறது...
என்னைப் பற்றித் தெரிந்த நீயே பயப்பட்டால் எப்படி? தைரியமா இரு!

கொள்ளைக்காரர்கள் காத்திருந்தார்கள்.

அவர்களை தாக்கினால்தான் முகமூடி வருவான் போலிருக்கிறது!
தாக்குவோம்!
முகமூடி வந்தார். அவரது கூர்மையான் பார்வை கொள்ளைக்காரர்களைப் பார்த்தது.
எதுக்காக இப்படிப் பதுங்கியிருக்கிறார்கள்?
அதேநேரம் கொள்ளைக்காரர்கள் தாக்கினார்கள்!
உதவி... உதவி...
இன்னும் பலமா கத்து!

கத்துடா...
கொலை... கொள்ளை...
நீ கத்துவது எனக்கே கேட்கவில்லை! பலமா கத்து!
உதவி... உதவி...
இடை அழகியின் குரல்தான்... நல்லா நடிக்கிறாள்...
முகமூடியைக் காணோமே...
போய்ப் பார்ப்போம்!
உதவி... உதவி... உம்...
?!

வந்துவிட்டான்

முகமூடி மனிதன் வந்துவிட்டான்.
பிடியுங்கள்.

சரியா மாட்டிச் கொண்டான்..

மாக்ஸ் விசில் அடிக்கிறார்.
முகமூடி வந்து விட்டான்.
ஓடு... ஓடு....
மாயாவியின் அடிகள் இடியாக இறங்கின!
ஆ!
பதக்கம் திருடிய கூட்டம் இதுதானா?
பார்க்கவே பயமா இருக்கிறது!
எவ்வளவு பயங்கரமா தாக்குகிறான்...
ஏய்... உன்னைக் காப்பாற்றத்தானே நான் வந்தேன்.
நாலாபுறம் இருந்தும் கொள்ளைக் காரர்கள் பாய்ந்து வந்தார்கள்.
அ... பிடி... விடாதே...

ஆ....!
நாடகமா நடத்துறீங்க?
திருட்டு நாயே....
இப்ப மாட்டிக்கொண்டது நான் அல்ல! நீங்கள்தான்!
மாயாவி மின்னலாக செயல்பட்டார்
கும்
ஆ...

நான் போனால்தான் அவனை ஒருகை பார்க்க முடியும்!
பிடி...
விடாதே...
பாயும்புலியாக மாயாவி சிலிர்த்து எழுந்து தூள் பறத்தினார்!
மாயாவி என்ற புயலில் சிக்கிக் கொள்ளைக்கூட்டம் சின்னாபின்னம் ஆயிற்று!

இன்னும் யார் இருக்கா? வாங்கடா!
ஆ
ஆ

அவனை உயிரோடு பிடிக்க வேண்டும்!

மாக்ஸ் சுட்டான்!
யாரடா, அது?

ஆ!
மாயாவியின் துப்பாக்கியும் வெடித்தது!
மாக்ஸ் தப்பி ஓடினான்!
இராணுவவீரன் போல சுடுகிறானே!
விடக்கூடாது! கொள்ளைச் கூட்டத்தில் இவன் ஒருவன்தான் மிச்சம்.

மாயாவி அவன் மீது பாய்ந்தார்!
நான் தப்பித்தேன்! அடிபட்டிருந்தால் செத்தேயிருப்பேன்!
ஆ!
டேவிட்டின் பதக்கத்தைப் பறித்தது நீதானே?
இல்லை... நான் இல்லை...
சொல்லு... பதக்கத்தைப் பறித்தது இவர்களில் யார்?

அதோ அவன்தான்!
அப்போது இடை அழகி வந்தாள்.
ஓ... இந்த நாடகத்தின் கதாநாயகி.
நீயும் இந்தக் கொள்ளைக்கூட்டத்தை சேர்ந்தவள்தானே?
நீ எங்கே ஓடுகிறாய்?
கும்!
ஆ...
என்னை விட்டுவிடு... எனக்கு ஒன்றும் தெரியாது...
எல்லாம் போலீசிடம் சொல்லு!

மாயாவி அவனை சோதித்தார்.
அப்பாடா... பதக்கம் கிடைத்தது!

எல்லோரையும் போலீசில் கொண்டு போய் ஒப்படைக்க வேண்டியதுதான்!
!!

?
யார் நீங்கள்?

யார் இவங்க... இப்படி விழுந்து கிடக்காங்க...

கொள்ளைக்காரர்கள் போலிருக்கிறது!


உதவி... உதவி...

உடனே பூங்காவுக்கு வாங்க....
!!!
ஓய...ய்...ய்....
போலீஸ்கார் விரைந்து வந்தது.
பூங்காவுக்கு வந்த போலீசாருக்கு ஓரே வியப்
என்ன நடந்தது?
டயானா வீட்டில் .
யார்... நீங்களா...
ஆமாம்.

கையில் என்ன காயம்...
ஒரு துப்பாக்கிக் குண்டு உரசிக்கொண்டு போயிற்று... காயம் ஒன்றுமில்லை.
என்ன நடந்தது?
பதக்கத்தை மீட்டு வந்துவிட்டேன்!
அதே நேரம்...
கொள்ளைக்காரர்கள் கொல்லப்பட்டார்களா...
எப்படி... யார் கொன்றது...

அந்த முகமூடி மனிதனாகத்தான் இருக்கும்...
அவன் ஒரே ஆள் இத்தனை பேரை அடித்துப் போட்டுவிட்டானா?
போலீசு நிலையத்தில்...
பூங்காவில் நான் நிலவைப் பார்த்துக் கொண்டிருந்தேனா...
கதைவிடாதே! இன்று அமாவாசை!
அவள் என் காதலி... எங்கள் கூட்டத்தில் ஒருத்தி...
பொய்... இந்த ஆளை நான் பார்த்ததே யில்லை!
அடுத்த நாள் காலை செய்தித்தாளில்—
முகமூடிவீரர் சாகசம்! கொள்ளைக்கூட்டம் பூண்டோடு ஒழிந்தது!!
(முடிந்தது)

கண்டுபிடியுங்கள் !

கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் மூன்று மட்டும் ஒரே மாதிரியானவை. அவை எவை? கண்டுபிடியுங்கள் பார்ப்போம்!



விடை: D, F, K.

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

Licenced to Post WPP
Licence No. TN/MS/(N)134.

Regd. No. TN/MS (N)/461/97
Regd. as Newspaper in India No. 42576/84 – ISSN 0971–8567

கடல் நகரம்

செவ்வாய் கோளுக்கு
போக முயன்றவர்கள்
விபத்தில் சிக்கி வேறு
ஒரு கோளுக்கு
போனார்கள். அங்கே...
ஆபத்து காத்திருந்தது!

**வித்தியாசமான
விண்வெளிக் கதை**

படிக்கத் தவறாதீர்கள்!

அக்டோபர் 1-ந்தேதி இதழில்
வெளிவருகிறது!

"ராணி காமிக்ஸ்", சென்னை - 600 007.